வடநாடு தொடர்பால் தெலுங்குமொழி மறந்தேனே!

Phone No. 4502 — Regd. No. M. 5458
[விலை அணா ஒன்று] — [இலங்கை 10 சதம்]

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. — MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மணி 1] சென்னை (17—12—49) வெளியீடு (18—12—49) [இதழ் 119

ஆச்சாரியார் வருந்துகிறார்: அவருக்கு அனுதாபம்!

—(0)—

பண்பட்ட உள்ளமும் பச்சிளமாணவரும்

செயலால் காட்ட முனையாததேன் 'சொல்லின் செல்வர்கள்?'

தென்னாட்டைவிட்டு நீண்டகாலம் வெளியில் தங்கிவிட்டேனாகையால், எனது அரைகுறைத் தெலுங்கு அறிவும் இப்போது சுத்த மோசமாய்ப் போய்விட்டதென்பதை, வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்; எனவே, ஆங்கிலத்தில் பேசவேண்டிய அவசியத்திலிருக்கிறேனென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்களது புதிய (ஆந்திர) மாகாணம் உங்களனைவர்க்கும் நம்பிக்கையூட்டும் நட்சத்திரமாகும். சென்னை பிரதமராக நான் பதவியேற்ற அந்த நாள் முதற்கொண்டே, உங்களது இந்நம்பிக்கை நிறைவேற்றத்தைக் கண்ணாரக் காணும் நன்னாளை எதிர்நோக்கியே இருந்தேன்; இப்போது இது சம்பந்தமாக ஒரு சமரச முடிவேற்பட்டுவிட்டது கண்டு மகிழ்கிறேன். நடைமுறை எப்படி என்பது மட்டுமே இப்போதைய பிரச்னையாக இருக்கிறது. அவசரப்படுவதில் பெரும் பயனெதுவுமில்லை. இதனை நன்முறையில் நிறைவேற்ற சர்க்கார்களின் பொறுப்பிலேயே விட்டுவிடவேண்டும். இப்பிரிவினை சம்பந்தமான பத்திரத்தில் கையெழுத்திடும் பெரும் வாய்ப்பு எனக்குக் கிட்டியிருக்குமேயானால், பட்டற்ற மகிழ்ச்சி கொண்டிருப்பேன்; ஏனெனில் அதனாலேற்படக்கூடிய பெருமை என்னைச்சாருமல்லவா? புதிய மாகாணம் விரைவில் உருவாகுமாக என்று நாமெல்லோரும் விழைவோமாக.

விசாகைப்பட்டினம் நகரசபை டிசம்பர் 15-ந் தேதியன்று தனக்களித்த வரவேற்பொன்றுக்குப் பதிலளிக்கையில், இந்திய கவர்னர்-ஜெனரல் தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சில பல மாதங்கள் வடநாட்டில் சென்று தங்கிய காரணத்தால், தனது அரைகுறை தெலுங்கு அறிவு படுமோசமாகப் போய் விட்டதென்று வருத்தத்துடன் தெரிவித்திருக்கிறார் ஆச்சாரியார். நமது மனமார்ந்த அனுதாபம் உரித்தாகுக என்று கூறுவதோடு அமையவே நம்மால் இயலவில்லை! ஆச்சாரியார் போன்ற அறிவுச் சிறப்பும், பன்மொழிக் கேள்வியும் உளப்பண்பாடும் மிக்கப் பேரறிஞர்கட்கும் இதுபோன்ற நிலை வந்தே முடியும்—இது இயல்பு—என்பதை ஆச்சாரியார் திருவாயினாலேயே சொல்லிக் கேட்கும்போது உள்ளடியான வியப்புணர்ச்சியே நம்மை வந்து உறுத்துகிறது. பண்பட்ட உள்ளம் ஒன்று, அறிந்துணர்ந்தமொழியறிவு சில பல நாள் தொடர்பில்லாக் காரணத்தால் மறந்தொழிந்து வருகிறதெனக் கேட்கும் போது, அதுவும் நம்கவர்னர்-ஜெனரல் சொல்லக் கேட்கும்போது, நமக்குக் கவலையும் துக்கமுமே மேலிடுகிறது. ஆச்சாரியாரின் தெலுங்கு அறிவு, ஆரம்பத்தில் எப்படி இருந்திருக்கக் கூடுமோ, அதைவிட மிகமிகக் குறைவாக இருக்க முடியும், இத் தென்னாட்டு மக்கள் பெரும்பான்மையோரின் தாய் மொழியறிவும்! கல்வி வாசனையில்லாத இலட்சோபலட்சம் மக்கள் இரு புக்க-

-யிருக்க, கற்றவர் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் அந்தச் 'சிலரின்' தாய் மொழியறிவு எவ்வளவு வருந்தத்தக்க அளவில் குறைந்து காணப்படுகிறதென்பதை நடப்பறிந்தோர் நன்குணர்வர். உத்தியோகத் துறையில் ஆங்கிலத்துக்கும், மதத் துறையில் சமஸ்கிருதத்துக்கும் ஆட்பட்டிருந்த இந்நாட்டுப் படித்த கூட்டத்தின் பரிதாப நிலையில் தாய்மொழியுணர்வும் அதன் முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டுமென்ற உணர்ச்சியும் வளர ஏதுவில்லாமலேயே போய்விட்டதை யாரே அறியார்! சர்க்காருக்கும் சமயத்துக்கும் அடிமைப்பட்டு தன்மதிப்பை தூர விலக்கி வைக்கவேண்டிய கட்டாயத்திலிருந்த படித்த கூட்டத்தின் வழிவரும், படித்தக் கூட்டத்தைப் பார்த்து (கல்வித் துறையில்) விழிப்பு பெற்றவரும், இன்றைய இளைஞர் சமுதாயம் மட்டும் தாய்மொழியுணர்வு இயல்பாகவே பெற்றிருக்குமென்றோ, மொழியாதிக்கத்துக்குப் பயன்படும்படியான காரியங்களில் ஈடுபடுமென்றோ எதிர்பார்ப்பது இயற்கைக்கு விரோதமேயாகும். எனவே, பரிதாபத்திற்குரிய இந்நாட்டைப்பொறுத்தவரை, இளைஞர்களுக்குத்தாய் மொழியறிவு தரவேண்டுமென்பதோடு, தாய்மொழியுணர்வும் ஊட்டவேண்டிய அவசியமும் அவசரமுமிருக்கிறதென்பதைப் பொறுப்புள்ளோர் உணராதிருக்க முடியாது. எந்த நாட்டு மக்களுக்கும் சிறப்பாக இளைஞர்களுக்கும் இயல்பாகவே அமைந்திருக்கக்கூடிய தாய்மொழி

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

ரஷ்யாமீது டிட்டோ கட்சியின் குற்றச்சாட்டு

மார்க்ஸீயப் பாதையை விட்டுச் செல்வதாகப் புகார்

பெல்கிரேட், டிச. 16— மார்க்ஸியத்தின் பாதையைவிட்டு இதைமலின் விலகிச் செல்கிறது என்பதுடன், உள்நாட்டிலும் சரி வெளிநாடுகளிலும் சரி சுதந்திரத்தைப் பறித்து தன் ஆதிக்கத்தை நிலைநாட்டவே ரஷியா முயல்கிறது என்று மார்ஷல் டிட்டோவின் கட்சிப் பத்திரிகையான 'கோம்னிஸ்ட்' டில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டிருக்கிறது.

சோஷலிஸ்டு சமூகம் நம்ப முடியாத வழிகளில் ரஷியாவில் நிர்வாகம் நடைபெறுகிறதென்றும் கம்யூனிஸ்டு தலைவர்கள் ஏகபோக அதிகாரம் தலைதூக்கி யிருக்கிறதென்றும் இதில் கூறப்பட்டிருக்கிறது.

— குளோப்

மாகாண நெசவாளர் தொழிலாளர் மாநாடு

சென்னை, டிச. 16— டிச. 17, 18, 19 தேதிகளில் சென்னை மாகாண வர்த்தகக் காங்கிரஸின் சார்பில் நடக்கவிருந்த மாகாண நெசவாளர் தொழிலாளர் மாநாடு ஒத்திவைக்கப்பட்டு, டிச. 22, 23 ஆகிய தேதிகளில் சென்னை மெமோரியல் ஹாலில் நடைபெறும்.

அகதிகளுக்கு வைடமின் மாத்திரைகள்

பம்பாய், டிச. 15— போஷாக்கு குறைவுள்ள அகதிகளுக்கு இலவசமாக அளிப்பதற்காக வைடமின் மாத்திரைகள் 200 பவுண்ட் பால்பொடி, 5 டன் மாமிசம் இவைகளை இந்திய சர்க்காரின் நிவாரணக் கௌன்ஸில் பம்பாய்க்கு அனுப்பியிருக்கிறது.

இந்திய அரசுப்பிரதிநிதிகள் சம்பளம் உயரும்

நேருவின் பொறுப்பற்ற பதில்

மந்திரிகளின் சம்பளத்தில் 15 சதவிகிதம் வெட்டப்பெறுமென்பது அயல்நாடுகளிலுள்ள இந்திய அம்பாஸிடர்களுக்கும் (அரசுப் பிரதிநிதிகள்) தானே என்று மத்திய சட்டசபையில் தோழர் காமத் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த பண்டித நேரு, அவர்கள் சம்பளம் குறைக்கப்பட மாட்டாதென்றும், அவர்களின் சம்பளத்தை உயர்த்தலாமா என்று கூட யோசனை செய்து கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வியட்நாமுக்கு விடுதலையளிப்பதே பிரான்ஸுக்கு நன்மை தரும்

—(0)—

'கார்டியன்' அறிவுறுத்தல்

பிரெஞ்சு யூனியனிலிருந்து வியட்நாமுக்கு விடுதலை அளிப்பதன் மூலம் தனக்கு அதிகச் செலவு ஏற்படாது என்பதை பிரெஞ்சு சர்க்கார் யோசிக்க வேண்டும் என்றும் அன்னாம் மன்னர் பாவ்டேக்கு ஆசிய நாடுகளின் அனுதாபம் இல்லாதிருப்பது ஒரு சமரசம் ஏற்படுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறதென்றும் வியட்நாமுடன் சமரசமாகப் போவதற்கு முன், பாவ்டே ஆசியநாடுகளின் ஆதரவைப்பெற வேண்டியது அவசியமென்றும் மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகை தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

சீனக்கம்யூனிஸ்டுகள் இந்தோ-சீன எல்லையை சமீபித்திருப்பதால் பாவ்டேயின் நிலைமை ஊசலாடிக்கொண்டிருந்தாலும் அவர்தான் பிரெஞ்சு சர்க்காரின் கைப்பொம்மையல்ல, தேசியத் தலைவர் தான் என்கிற எண்ணத்தை ஏற்படும்படி செய்வாரானால் அவர் தலைநிற்கமுடியும் என்று அப்பத்திரிகை எழுதியிருக்கிறது.

அப்பத்திரிகை மேலும் எழுதியிருப்பதாவது,—

இந்தோனேஷியாவை டச்சுக்காரர் விட்டதுபோல், பிரான்ஸ் இந்தோ சீனாவைக் கைவிடுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அனாமியர்களுக்கு விடுதலையளித்தால், அந்நாட்டில் பிரெஞ்சுக்காரர்களின் கோரிக்கைகள் பல இடங்களிலிருந்து கிளம்பும் என்றும், பிரெஞ்சு யூனியனுக்கே முடிவுகாலம் ஏற்பட்டுவிடும் என்றும் பிரெஞ்சு வட்டாரங்கள் கூறுகின்றன. வியட்நாமுக்குச் சுதந்திரமளிப்பதன்மூலம் நன்மை ஏற்படும் என்பதைப் பிரெஞ்சு சர்க்கார் ஆலோசிக்க வேண்டும்.

கிழக்கில் ஒழிந்த இரண்டாவது வெள்ளை ஆதிக்கம்

—:0:—

இந்தோனேஷியாவுக்கு அதிகார மாற்றம் பற்றி பிரிட்டிஷ் பத்திரிகை

லண்டன், டிச. 16— இந்தோனேஷியாவுக்கு அதிகாரத்தை டச்சுகள் மாற்றுவது மூலம் கிழக்கில் இரண்டாவது வெள்ளை ஆதிக்கம் மறைந்தது என்றும், இதனால் டச்சுக்காரர்கள் 75000000 மக்களை இழக்கவேண்டியிருக்கும் என்றும் கெம்ஸ்லி பத்திரிகைகளின் ராஜதந்திர நிருபர் ஜான் பிஷர் கூறுகிறார்.

டச்சுகள் காட்டியதைவிட இந்திய விஷயத்தில் பிரிட்டிஷார் இன்னும் அதிமான தாராள மனதையே காட்டியிருப்பதாக அவர் கூறுகிறார்.

இந்தோ சீனாமீது பிரான்ஸ் சர்க்கார் இன்னும் விடாப்பிடியாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்றும் அவர் கூறினார்.

நேட்டாலில் கலவர பீதி

ஜூலுக்கள் மீது ஏற்பட்ட வெற்றியைக் கொண்டாட பிரிட்டோரியாவில் ஏற்பாடு செய்யப்பட்டு வரும்போது ஜூலுக்கள் அதிகமாகவுள்ள நேட்டால் மாகாணத்தில் கலவரப்பீதி உச்சநிலையை அடைந்து வருகிறது. சுதேசிகள் கிளம்புவார்கள் என்று இந்தியர்களும், ஐரோப்பியர்களும் மிகவும் கலவரமடைந்திருக்கின்றனர்.

போலீஸ் பாராக்கள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. போலீசாராலேயும் வகுப்புத் துவேஷத்தை மூட்டக்கூடிய வதந்திகள் எங்கிருந்து கிளம்புகின்றனவென்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. அமைதியாக இருக்கும்படி ஆப்பிரிக்கத் தலைவர்கள் பத்திரிகைகள் மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

மாலை மணி

சென்னை 17—12—49 சனிக்கிழமை

ஏனோ இந்தப் போக்கு?

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்பது 'புறநானூறு' கூறும் நெறி விளக்கம். இன்றைய ஆளவந்தார்களின் போக்குகளைக் காணும்போது, அவ்வறிவுரையைத் தான் காணிக்கையாக அவர்களுக்கு வைக்கத் தோன்றுகிறது.

இன்றைய அரசாங்கம் நல்லது ஏதும் செய்யாவிட்டாலும், கெடுதலாவது செய்யாமலிருந்தால், அதுவே போதும் என்று மக்கள் கருதும் அளவுக்குச் செயலாற்றி வருகிறது. அரசாங்கம் தன்னுடைய காலத்தையும் கருத்தையும், கருவூலத்தையும் நாட்டிற்குப் பயனுள்ள-தேவையான - ஆக்கந்தரும் திட்டங்களில் செலவிட்டு வருவதாக அரசாங்கத்தின் செயல் முறைகள் காட்டவில்லை! அப்படிக் காட்டாவிட்டாலும் கூட பாதகமில்லை, என்று கருத வேண்டியிருக்கிறது. பயன்படாத - ஆக்கந்தராத-துன்பந்தரும் திட்டங்களைத் தயாரித்து நாட்டிற்கு வழங்குவதைப் பார்க்கும் போது.

மத்திய அரசாங்கம் கல்விக்கென்று ஆண்டுதோறும் ஒதுக்கிய பணத்திலிருந்து 1 கோடியே 49 லட்ச ரூபாய் குறைக்கப்பட்டு விட்டது. இந்தச் செய்தியை இந்தியப் பாராளு மன்றத்தில், உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் முகத்தான் கல்வி மந்திரி தோழர் அபுல் கலாம் ஆஜாத் தெரிவித்துள்ளார். கல்விக்கென்று ஆறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தத் தொகையிலிருந்துதான் மேலே குறிப்பிட்டுருக்கும் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாகவே இந்திய அரசாங்கமும் சரி, மாகாண அரசாங்கமும் சரி கல்விக்கென்று செலவிடும் தொகை மிகமிகக் குறைவாகவே இருக்கிறது என்று, இங்கு வந்து செல்லும் மேலை நாட்டு அறிஞர்கள் எல்லோரும் சுட்டிக்காட்டிச் செல்கின்றனர். 100-க்கு 85 பேர்கள் எழுதப்படிக்கத் தெரியாத தற்குறிகளாக இருக்கும் இந்தத் துணைக்கண்டத்தில், உள்ளபடியே மற்ற நாடுகளை விட அதிகமான அளவில் கல்விக்குச் செலவிடுதல் அன்றோ முறை! அதிகமான அளவுக்கு இல்லை என்றால், போதுமான அளவுக்குச் செலவழிக்கப்படுகிறதா என்றால், அதுவும் இல்லை! மிகக் குறைந்த அளவுக்குத்தான் செலவழிக்கப்படுகிறது என்றாலும், அந்த அளவாவது நிலைத்திருக்கச் செய்ய முடிகிறதா என்றால், அதுவும் இல்லை! மேலும் மேலும் குறைப்பு! பின் எப்படி இந்த நாடு முன்னேற வழியேற்படும்!

இந்தியத் துணைக்கண்டம் மிகத் தாழ்ந்த நிலையில் சீரழிந்து கிடக்கிற தென்றால், அதற்கு முக்கிய காரணம் அறியாமையும், அதன் வழி தோன்றும் வறுமையுமேயாகும் என்பதை நன்கறியலாம். நாடு நலமுற வேண்டுமாயின், முதலில் அறியாமை அகல வேண்டும். அறியாமை அகல வேண்டுமாயின், கல்விக் கூடங்கள் மிக வேண்டும். இப்பொழுதே அறிவு நீர் ஊறும் கல்வி ஊற்றுகள் மிகச் சொற்பமாக இருக்கும்போது, அவைகளில் சில பாதிக்கப்படும் நிலையில், இந்திய அரசாங்கம் திட்டம் தீட்டியிருக்கிறது—அதாவது பண உதவியைத் தடை செய்திருக்கிறது என்றால், அதன் போக்கு பற்றி என்ன கூறுவது?

இந்திய அரசாங்கம் இராணுவத்திற்குச் செலவிடும் தொகையையும், அதே நிலையில் கல்விக்குச் செலவிடும் தொகையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், கல்விக்குச் செலவிடுவது எத்துணை மடங்கு குறைந்ததாகும் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்; கல்வி எந்த அளவுக்கு அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் அறியலாம்.

கல்வி ஊற்றை அடைக்க எப்படி மனந்துணிகிறது இந்திய அரசாங்கம்? செலவைக் குறைக்கவேண்டுமானால், அதற்காகக், கல்வியின் தலையில் ஏன் கைவைக்க வேண்டும்? ஆடம்பரச் செலவுகளை அதிகப்படியாகக் குறைத்திருக்கலாம்! வெளி நாட்டுத் தூதுவராலயங்களில்கொட்டும் பணத்தில் பெரும்பகுதியை மீட்டிருக்கலாம்! குடிசைத் தொழில்-கதர்-இந்தி போன்ற உருப்படாத திட்டங்களில், கோடிக்கணக்கான ரூபாய்களை வீணாக்காமல், அவற்றை கல்விக்குச் செலவழிக்க ஏன் முன்வரக்கூடாது?

இந்திய அரசாங்கம் கல்விக்கென்று ஒதுக்கியுள்ள தொகையே மிகக் குறைவு- அந்தத் தொகையிலும் குறைப்பு செய்திருக்கும் திட்டத்தை எவ்வாறு கண்டிக்காமலிருக்க முடியும்? ஏனோ இந்தப்போக்கு! என்று எப்படி கேட்காமலிருக்க முடியும்?

அறிவுக் கதிர்!

ஆராய்ச்சி செய்ய உரிமையில்லையென்றால், உனக்கமைந்துள்ள அறிவின் பயன் தான் என்ன? ஆராய்ச்சி செய்ய வேண்டாமென்பவன் ஒவ்வொருவனும் உன் அறிவைப் பறிக்கும் திருடனேயாவான்.

—இங்கர்சால்

[கற்பனை உரையாடல்:]

கண்டதும் கேட்டதும்

[துப்பறிவோன]

[உரையாடுவோர்: ராமசாமி தேவர், கோவிந்தசமி பிள்ளை, அறிவழகன்.

இடம்: தஞ்சை ஜில்லாவில் ஒரு கிராமத்தில் ராமசாமி தேவர் வீட்டுத் திண்ணை

காலம்: மாலை.]

கோவி: (ராமசாமித் தேவர் வீட்டு வாசலில் நின்றுகொண்டு) டேய் தம்பி; அப்பா இருக்காராடா?

அறி: ஓ! நீங்களா, வாங்கண்ணே, உட்காருங்கோ. அப்பா விஜயபுரத்துக்குப் போயிருக்கார், இதோ வந்துவோர்.

(பிள்ளைவாள் மேல்துண்டால் திண்ணையைத் தட்டிவிட்டு 'உஸ், ராமபணு' என்று சொல்லிக்கொண்டே உட்காருகிறார். இதே சமயத்தில் வெளியில் சென்றிருந்த தேவர் வீட்டிற்குள் நுழைகிறார் பிள்ளைவாளைப் பார்த்ததும்)

ராம: ஓகோ! நீங்களா. என்ன சேதி. ரொம்ப அலுத்துப் போயிருக்காப் போலிருக்கே!

கோவி: ஆமாப்பா, நெல்லு விக்க புறப்பட்டேன். வந்தகோ இவ்வளவு சேமாச்சு. பயறுவ காசை வேலிலே எளக்கமாட்டேங்கரான்கள்...வாவா இது பெரிய எளவான்னு போச்சு.

ராம: ஆமாம்...ஆமாம்; எங்கேயும் அப்படித்தானிருக்கு காலம் பின்னைப்போல இல்லே எடுத்ததுக்கெல்லாம் பணநெருக்கடி என்கிறான்கள்.

கோவி: அப்படிச் சொல்லாதீங்க. 'மணி மார்க்கெட் டைட்'ன்னு சொல்லுங்கோ!

ராம: அஹ்ஹஹ்ஹ...(சிரித்துக் கொண்டே) பேஷ், நல்லா சொன்னிங்கோ. இந்த சுயராஜ்யம் வந்தாலும் வந்துச்சு... என்னென்னமோ சொல்லி நம்ம உயிரை வாங்குறாங்கோ. காரணம் கேட்டா, ரூபாயிக்கு மதிப்பு கொறஞ்சு போச்சு என்கிறான்கள். நெருக்கடி பிடிச்சுக் கேட்டா, உற்பத்தியைப் பெருக்குங்கோ என்கிறாங்கோ. இதென்னப்பா பெரிய எளவாம் போச்சு. உற்பத்தியைப் பெருக்கிறதாவது மண்ணாங்கட்டியாவது! நம்ப ஜில்லாவில உற்பத்திக்கு என்ன கேடு?

கோவி: அட, அது கெடக்கட்டும், நம்ம நாட்டிலே எந்த ஜில்லாவிலேதான் உற்பத்தியில்லாம இருக்கு? ஏதோ மழையில்லாத வேளையிலே கொஞ்சம் ஏறத்தாழ இருக்கும். இவ்வளவுதானே!

ராம: அப்படியே உற்பத்தி இல்லேன்னே வச்சிக்கிங்கோ. உற்பத்தியை பெருக்க இந்தக் கவர்மெண்டு என்னய்யா பிரமாதமா உதவி செய்தடுத்தன்னு கேக்கிறேன்.

கோவி: அட, அவங்களுதவி செய்யாட்டா கூட பரவாயில்லே, உபத்திரவஞ் செய்யாமே இருக்காங்களா பாரும்! 'பிச்சை எடுத்ததாம் பெருமாள், அதைப் பிடுங்குச்சாம் அனுமார்' என்கிறது போல, ஏற்கனவே கடன்காரன்களாக இருக்கும் நம்ப தலையிலேயே கையை வைக்க ஆரம்பிச்சுட்டதே! நம்மகிட்டேயே கடன் கேட்க அல்லவா ஆரம்பிச்சுடுத்து!

ராம: ஆமாம், அதைச் சொல்லுங்கோ... ஆமா, அவங்கதான் என்ன பண்ணுவாங்க டில்லி சர்க்கார் உதவி பண்ணிறதானே!

கோவி: அட, போமய்யா. நீர் சுத்தப் பைத்தியக்காரர் டில்லி சர்க்காராவது மண்ணாங்கட்டியாவது? இங்கே இவங்களுக்கு புத்தி எங்கே போச்சு? கேட்கக்கூடாதா அவர்களை, இக்கமாதிரி எங்களைச் சாண்டீங்களே, இது நல்லதா, கடன் கொடுத்து உதவ வேண்டிய நீங்களே கொடுத்து உதவி பண்ணலேன்னு, நாங்க எப்படி எங்க ஜனங்களிடம் போய் கடன் கொடுன்னு கேட்கிறதுன்னு....உம், இதெல்லாம் நம்ப அவங்க செய்த முட்டாள்தனத்துக்குக் கூலி!

ராம: (வீட்டின் உட்பக்கம் நோக்கி,) "டேய் தம்பி, அப்படியே அந்த வெத்திலைப் பெட்டியை எடுத்துக்கிட்டு வாடா." என்று சொல்லுகிறார். அறிவழகன் பெட்டியைக் கொண்டு வந்து திண்ணைமேல் வைத்துவிட்டு, இருவரையும் பார்த்து சிரிக்கிறான்)

கோவி: என் தம்பி சிரிக்கிறே

அறி: இப்போ நாளைபோ முட்டாள்ன்னு சொன்னிங்களே, அதை நினைச்சிட்டுத்தான் சிரிச்சேன்.

ராம: அட, அவன் கெடக்கிறான், சும்மா பார்த்தாலும் அவனுக்கு இதுதான் வேலை. ஒரு மாதிரி காரனல்லவா!

அறி: (கவுண்டரைப் பார்த்து) அண்ணே, நீங்களே சொல்லுங்கோ, இப்ப நான் என்ன சொன்னேன்? முட்டாள்கள் இன்னு சொன்னீங்களே அது யார் இன்னு கேட்டேன். அவ்வளவுதானே! இதுகூட குத்தமா?

ராம: கவுண்டர்வாள், அவன் என்னை பல்லாம் கிண்டல் பண்ணுவான். காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டோமல்லவா?

கோவி: ஆமாப்பா, என் கிண்டல் பண்ணமாட்டான். இந்த காங்கிரஸ்காரங்க பண்றதும் அப்படித்தானேயிருக்கு. கட்டாயமா கடன் கொடுக்கணுமாமெல்லாம். இது எங்க அடுக்கும்? இவங்களும் மந்திரிங்கோன்னு ஆளவந்துட்டாங்களே. மயிலைக் கைன்னு விசாரி தலையிலேயா கையை வைக்கிறது ஆட்களை பாரு! நம்ம கடன் கொடுக்கணுமாம், இவங்க ராஜாங்க நடத்தணுங்களாம். நாமெல்லாம் என்ன மார்வாடிகளா, வட்டிக்கு கடன்கொடுத்துக்கிட்டு உட்கார்ந்திருக்க?

அறி: ஆம், அப்படிச் சொல்லுங்கோ அண்ணே! மார்வாடியவுங்க இந்த நாட்டைச் சாண்டிராங்கோன்னு நான் சொன்ன போதெல்லாம் என்மேலே கோபிச்சுக்கிட்டிங்களே, இப்போ...!

கோவி: இல்லிங்கோ, தம்பி சொல்லறது நெசம். எல்லாத் தொல்லையும் இந்த வடக்கித்தி பணக்காரங்களாலே வர்றதுதான். பாருங்களேன், காங்கிரஸ் கவர்மெண்டிலே, மத்திய சர்க்காரிலே எல்லாம் மார்வாடி, குஜராத்தி இவர்கள் வச்சதுதானே சட்டமாயிருக்கு. அங்கே நம்மவங்களுச்சும் இருக்காங்க இன்னு கேட்க.

ராம: ஏன், சந்தானம் அய்யங்காரில்லையா? கோபாலசாமி அய்யங்காரில்லையா?...

அறி: ஆமாம்! அந்தப் பார்ப்பான்கள் இருக்காங்க அல்லவா, விஞ்சாப்பிலேதான். அவங்க அப்படி மட்டுமா இருக்காங்க அவங்க எங்கதான் இல்லை? தமிழர்களுக்கு யாரிருக்கா, அதைச் சொல்லுங்கோ...!

ராம: டேய், உனக்குத் தெரியாதடா, நீ சிறு பயல்.

கோவி: அட, நீங்க என்னுங்க இப்படிப் பேசிரிங்க. காங்கிரஸ், காங்கிரஸ் இன்னு சொல்லி பஞ்சப் பெட்டியிலே ஓட்டுப் போட்டு ஏமாந்தது போதும். இனிமே கழக ஆட்சிக்கா வாங்க சொன்னதுதான் சரியான வழி.

அறி: சபாஷ்! அப்படிச் சொல்லுங்கோ!

ராம: அப்படின்னு?

அறி: அப்படின்னு! 'திராவிட நாடு திராவிடருக்கே' (என்று சொல்லிவிட்டு, சிரித்துக் கொண்டே அவ்விடம் விட்டு ஓடுகிறான். தேவரும் பிள்ளையும் ஒருவரை யொருவர் பார்த்து விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றனர்.)

தி. மா. தி. மு. க. மாநாடு

மாநாட்டிற்குத் தீர்மானங்கள் அனுப்பி வைக்கும் வெளியூர் கிளைக்கழகங்கள் 26-12-49க்குள் அனுப்பிவைக்க கோருகிறோம்.

விஷயாலோசனைக் கூட்டத்திற்கும் கலந்து கொள்வதற்கு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிளைக்கழகங்களும் ஒரு பிரதிநிதியைத் தெரிந்தெடுத்து 20-12-49க்குள் மாநாட்டு பணிமனைக்கு அறிவிக்க வேண்டுமென, விளம்பரச் செயலாளர், து. மா. வானமாமலை வேண்டுகிறார்.

வேண்டுகோள்

1-1-1950-ல் நடைபெற விருக்கும் திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிற்கு வரும் வெளியூர் பிரதிகளுக்கு, உணவு, இடவசதி, செய்து தரவேண்டிய திருப்பதால் 25-12-49க்குள் ஒவ்வொரு கிளைக் கழகக் செயலாளர்களும் ஒவ்வொரு பகுதிகளிலிருந்து எவ்வளவு பேர் வருகிறார்கள் என்கிற விபரத்தையும், கட்டணத்தையும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

குறிப்பு:— உணவு ரேஷன் வாங்க வேண்டியிருப்பதால் குறித்த தினத்திற்குள் அவசியம் தெரியப்படுத்த வேணும்.

செயலாளர்

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக்கழக மாநாடு

தெப்பகுளம் P.O. திருச்சிராப்பள்ளி.

★ மதிப்புரை ★

[மதிப்புரை வேண்டுவோர் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்.]

ஏழையின் அரசியல்

[ஆசிரியர்:—என். சதாசிவம்; வெளியிட்டோர்:— இன்ப வாழ்வுப் பதிப்பகம். ஆர் எஸ். புரம். கோயம்புத்தூர் விலை அணு 8]

வள்ளுவர் காட்டிய வழியை அடிப்படையாகக்கொண்டு மேலெழுந்த வாரியாக அரசியல் பற்றிக் கூறுகிறது இந்நூல். தற்போதைய ஆட்சியில் காணப்படும் குறைகளையும், ஆட்சியாளரின் அடக்கு முறைகளையும், ஏழையர் நிலைமையையும் விளக்குகிறார் இந்நூலாசிரியர். இதில் பொது உடைமைக் கருத்துகள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. அனைத்துக்கும் அடிப்படை பகுத்தறிவு என்பதும் இறுதியில்விளக்கப்படுகிறது. எளிய நடையில் அமைந்துள்ளது.

* * *

மனித இயல்பு

[ஆசிரியர்: நாகத்தேவர் பழனியப்ப கவுண்டர்; கிடைக்குமிடம்: இராஜன் பப்ளிஸிட்டி 44 லட்சுமிபுரம் 6-வது தெரு, மதுரை]

இந்நூலில் மனித வாழ்க்கையைப் பற்றி சில சொல்லப்பட்டிருக்கின்றன. அனைத்தும் வைதீகக் கருத்துகளாகவே உள்ளன. வேண்டாத விஷயங்களும் உள்ளன.

* * *

நேருவின் இந்தியா

[ஆசிரியர்: சக்திதாசன்; கிடைக்குமிடம்: தமிழ்நாடு நியூஸ் ஏஜென்ஸி நாகர் கோவில், திருவாங்கூர். விலை அணு 2]

காங்கிரஸ்காரர்கள் அடிக்கடி பேசும், தியாகம், சுதந்திரம் என்ற பல்லவி தான் இச்சிறு வெளியீட்டிலும் காணப்படுகின்றன வேறு புதிய விஷயம் எதும் இல்லை.

● ● ●

சன்மார்க்க சபதம்

[ஆசிரியர்: பச்சையப்பா இளைய பெருமாள்; கிடைக்குமிடம்: இராஜன் பப்ளிசிடி 44 லட்சுமி புரம், 6-வது தெரு மதுரை]

தெய்வ பக்தியில் ஆரம்பமாகி தெய்வபக்தியிலேயே முடிகிறது. இந்நூல். இடையில் பாவ-புண்ணியம், தேசாபிமானம், பாஷாபிமானம், ஆலய வழிபாடும், சமரச போதனைகள் முதலியன காணப்படுகின்றன. இடையிடையே திருக்குறளும் எடுத்தாளப்பட்டிருக்கிறது

● ● ●

திராவிடம் பிரிந்தால் வாழுமா?

[ஆசிரியர்: அ. கு. பாலசுந்தரன்; பி. ஏ. எல். டி. கிடைக்குமிடம் தலைலட்சுமி பதிப்பகம் திருவெல்லிக்கேணி சென்னை: விலை: அணு 3]

திராவிடம் பிரிந்தால் வாழுமா, வாழாதா என்ற ஐயப்பாடுடையவருக்கு எழுவது இயல்பு. ஆனால், தோழர் அ. கு. பாலசுந்தரன் அவர்களால் எழுதப்பட்டுள்ள இச்சிறு நூல் அந்தகைய ஐயப்பாட்டை அறவே விலக்கி விடுமென நம்புகிறேன் திராவிட நாட்டின் பொருளாதார நிலைமைச் சுருக்கச் சொல்லி விளக்க வைக்கிறார். படிக்க வேண்டிய நூலே.

● ● ●

தமிழர் திருமண முறைகள்

[ஆசிரியர்:— அ. கு. பாலசுந்தரனார் பி. ஏ. எல். டி.; கிடைக்குமிடம்;—தனலட்சுமி பதிப்பகம்; விலை அணு 8]

இதில், வடமொழி கலவாமல் தமிழ் மொழியின் உதவியைக் கொண்டே திருமணச் சடங்குகளை நிறைவேற்ற வழி வகைகள் காட்டப்பட்டிருக்கின்றன.

இம்மண முறைகளில் சைவ முறை, வைணவ முறை என இரு முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. வைணவ முறை நூல் விலை 4 அணு

* * *

கிள்ளை விடுதூதும் வெற்றியும்

[ஆசிரியர்: டி. எஸ். ஸ்ரீ ...; கிடைக்குமிடம்: தென்னிந்திய ஜீவ ரக்ஷ பிரசார சபை. செளக்கார் பேட்டை, சென்னை]

இச் சென்னை ஜீவரக்ஷா பிரசார சபையாரால் வெளியிடப்பட்டிருக்கும் சிறு வெளியீடு. இதில் செம்மறியின் பொரால் உயிர் பலியிடுவது கண்டிக்கப்படுகிறது. எளிய பாடல்கள் மூலம் கருத்துகள் வெளிடப்பட்டுள்ளன.

* * *

முட்டாள் பயல்

[ஆசிரியர்: ஆதி; கிடைக்குமிடம்: கலை பிரசுரம், தேவகோட்டை. விலை அணு 2]

இது சிறுவர்கான ஒரு சிறு வெளியீடு. முட்டாள் பயல் முதலிய மற்றும் பல குட்டிக்கதைகளும் உள்ளன. படங்களோடு கூடியது. சிறுவர்கள் படிக்கலாம்.

* * *

வீழ்ந்த வெள்ளிகள்

[ஆசிரியர்: மதிதாசன் (பொருள்வைளச். எ. ரஹீம்) வெளியிட்டோர்: அறிவு மலர்ப் பதிப்பகம் கோவிந்தகுடி. கும்பகோணம். விலை அணு 6]

இதுவொரு சிறுகதை; ஆனால் கவிதை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. கதையின் அடிப்படை காதல்; காதலருக்கு இடையூறுகள் நேருகின்றன. முடிவில் காதலனும் காதலியும் மடிகின்றனர். இந்நிகழ்ச்சி தான் வீழ்ந்த வெள்ளி ஆயின கவிதைகள் எளிய நடையில் உள்ளன.

* * ●

சதிகாரச் சாமியார்

[ஆசிரியர்: செங்குட்டுவன் விலை அணு 12. கிடைக்குமிடம்: 22 சன்னு புக்காரத் தெரு, சின்ன காஞ்சிபுரம்.]

இந்நாட்டில், கடவுளின் பேரால் மதத்தின் பேரால் வலை விரித்து உல்லாச வாழ்வு பெறும் உலுத்தர்களின் வலையில் சிக்கிச் சீரழியும் இளம் பெண்களின் நிலைமை கதை வடிவில் இதன் ஆசிரியர் சித்தரித்துக் காட்டுகிறார் இந்நூல் நல்ல அழகிய மூவர்ண முகப்புப் படத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. படித்துப் பாருங்கள்.

● ● ●

போட்டோ வேலையின் மர்மம்

[விலை ரூபாய் ஒன்று. கிடைக்குமிடம்: சாரதி குடிசைத் தொழிற்சாலை, ஆம்பூர் (வ-ஆ).]

புகைப்படம் எடுக்கும் தொழிலில் ஆர்வமுள்ளவர்களுக்கு இந்நூல் மிகவும் பயன்படும்.

* * *

மறைந்த மாவீரன்

[ஆசிரியர்: பி. வி. லிங்கம்;

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

எங்கள் கொடி!

'ரவி'

(ஆனந்தக் களிப்பு வர்ண மெட்டு).

எடுப்பு

வானில் திகழ்கொடி காணீர்—மக்கள்
வாழ்வில் இனிமை கூட்டிப் பேணீர் (வானில்)

அடிகள்

தேனின் சுவையதாம் வாழ்வு—இனித்
திராவிடர் மடமையை வெல்லுவர் என்றே
வானிடைப் பண்ணிசை மீட்டிப்—பறக்கும்
வண்ணக் கொடியின் எண்ணம் மீளீர் (வானில்)

பெருமை பொருந்திய மக்கள்—இன்று
சிறுமையில் உழன்றிடும் நிலையினைக் காட்டக்
கருமை நிறம்மேல் பாதி—அதைக்
கடிதில் ஒழித்திடக் கூடியே வாரீர் (வானில்)

விந்தை உதயச் செக்கர்—கொடுமை
வீழ்த்திய புரட்சி பரப்பிடும் செந்தீ
முந்திய பெருமை பெற்றி—மக்கள்
சிந்தும் செந்நிறக் குருதியும் பாரீர் (வானில்)

சாதிகளனைத்தையும் கொன்று—மக்களைப்
பேதத் திலாழ்த்திடும் நூல்களைப் போக்கி
மேதினி அறிவொளி பெறவே—எங்கும்
புதிசர் சிந்தனை நூல்களைப் பரப்பிடும் (வானில்)

செந்தமிழ் வாழ்வெம் வாழ்வு—அது
செழிக்கஎம் உயிரையும ஈவோம் என்ற
சிந்தை கொண்டசெந் தமிழர—ரதோ
சிரித்த முகத்துடன் நிற்பதைக்காணீர் (வானில்)

இமயம் வென்றதீர மன்னன்—கடல்
எதிர்ப்பினும் அழியா எம்பொன் னாடு
சமமும் இசைசேர் எம்மொழி—கடல்
கடந்தே வாணிபம் செய்திட்ட மக்கள் (வானில்)

ஆழ்கடல் முத்துகளெடுத்தே—தரையை
ஆழத் தோண்டி தங்கமும் எடுத்தே
வாழ்ந்த திராவிட ரின்று—பெற்ற
தாழ்வினை அழித்தே தளர்வினைப் போக்கிட
(வானில்)

நெஞ்சில் குத்திய வேலால்—படையை
நசுக்கிடும் யானையைக் கொன்ற வீரம்
பஞ்சுக் கிழவிதன் மார்பை—அறுத்திட
பிணத்திடை சிறுவனைப் புரட்டிய வீரம்

தாயின் பாலுடன் குடித்தோம்—இனித்
தளரோம் எதிர்க்கும் பகையுயிர் மடிப்போம்!
பாயும் புலிநிகர் தமிழர்—அவரால்
பொலிந்திடு நாடு புகழிடை வாழ்க...! (வானில்)

முறியடிக்கப்பட்ட தேசீய வீரர்கள் இந்தோ-சீனவில் தஞ்சம்!

படை கலைத்து பாதுகாப்பில் வைக்கப்பட்டனர் பல்லாயிரவர்

சீன சர்க்கார் படைத் தலைமை 'தில்லுமல்லு' பற்றி 'தா குங் பௌ!'

சீனவில் கம்யூனிஸ்டு படைகளுடன் தோற்றுப்போன பல்லாயிரக்கணக்கான தேசிய சர்க்கார் படை வீரர்கள் பிரெஞ்சு இந்தோ—சீனவில் புகத் தலைப்பட்டுவிட்டன ரென்று தெரிகிறது. இவர்கள் இந்தோ-சீனல் ஓடிப் புகுந்து, ஆயுதங்களையெல்லாம் களைந்தெறிந்துவிட்டு, பாதுகாப்பில் வைக்கப்பெற்றுவிட்டன ரெனக் கூறப்படுகிறது.

தேசிய சர்க்கார் படைத் தலைவர் பாய்சுங்ஹ்ஸி தனது படைகளுள்மூன்றை பிரெஞ்சு இந்தோ—சீனவுக்குக் கொண்டு செலுத்தி, பாவ்தாய் வியட்னும் சர்க்கார் படைகளுடன சேர்ந்துகொள்ள திட்டமிட்டு வருகிறாரென்று ஹாங்காங் கம்யூனிஸ்ட் ஆதரவுப் பத்திரிகையாகிய தா குங் பௌ டிசம்பர் 15-ந் தேதி எழுதியுள்ளது.

சர்க்கரைப் பங்கீடு அதிகரிக்கிறது?

சென்னை சரிக்கார் சர்க்கரைப் பங்கீட்டு அளவை இருமடங்காக்கும் திட்டம்பற்றி ஆலோசித்து வருவதாகவும், அநேகமாக அடுத்த வாரம் முதல் பங்கீட்டு அளவு அதிகரிக்கலாமென்றும் தெரியவருகிறது.

கையிருப்பு நிலை திருப்தியுறத் தக்கதாய் இருப்பதாகவும், மேற்கொண்டு சரக்கு எதிர்பார்க்கப்படுவதாகவும், எதிர்பார்க்கும் வண்ணம் சரக்கு வந்து விடுமானால், இப்போதுள்ள ஆரம்ப பங்கீடே ரத்து செய்யப்படுமென்றும் சொல்லப்படுகிறது.

முத்தியாலுப்பேட்டை திருவள்ளுவர் இளைஞர் கழகம்

காஞ்சி மணிமொழியார் "திருக்குறள் பரிசு"

சென்னை, டிச. 16—இக் கழகத்தினரால் மண்ணடி, புதுத்தெரு 94 95 ராஜமன்னார் பள்ளியில் 8—1—50 காலை 10 மணிக்கு இப் பரிசிற்கான "திருக்குறள் சொற்பொழிவுப் போட்டிகள்" நடைபெறும். மொத்தப் பரிசுத்தொகை ரூ 35 ஆகும். இது 25 ரூபாய் பரிசு, 10 ரூபாய் பரிசு என இரு பரிசுகளாக வழங்கப்படும்.

25 ரூபாய் பேச்சுப் போட்டிப் பரிசு:—இப்பரிசு ரூ. 15 முதல் பரிசாகவும், ரூ 10 இரண்டாவது பரிசாகவும் இரு பிரிவாக அளிக்கப்படும். இதற்கான போட்டியில் சென்னையிலுள்ள எல்லா கல்லூரி, உயர் நிலைப்பள்ளி மாணவர்களும், அரசியல் சம்பந்தமற்ற தமிழ்க் கழகங்களும் கலந்து கொள்ளலாம். கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் ஒரு பொருள் பற்றிப் பேசுதல் வேண்டும்.

1. வள்ளுவர் ஒரு உலகப் பெரியார்.
2. குறள் வகுத்த இல்வாழ்க்கை
3. காமத்துப்பால் விளக்கும் இன்பம்
4. ஒப்புரவு அறிதல்
5. திருக்குறள் மாண்பு.

10 ரூபாய் திருக்குறள் மனப்பாடப் பரிசு:—இது ரூ 6 முதல் பரிசாகவும், ரூ 4 இரண்டாவது பரிசாகவும் அளிக்கப்படும். 6-வது வகுப்பு முதல் 8 வது வகுப்பு உட்பட எல்லா ஆரம்பப் பள்ளி மாணவர்களும் கலந்து கொள்ளலாம். தங்கள் வகுப்பு தமிழ்ப் பாடபுத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் திருக்குறள் பாக்களை ஒப்புவித்தல் வேண்டும். கேட்கப்படும் குறளுக்கு உரையும் கூறவேண்டும். இதுதான் இப்போட்டிக்குரிய பொருளாகும்.

இவ்விரண்டு போட்டிகளிலும் அளிக்கப்படும் பரிசுகள் தவிர ஒவ்வொரு போட்டிக்கும் மூன்று "நற்சான்று சிறப்பு இதழ்"களும் அளிக்கப்படும்.

கலந்து கொள்ளும் எல்லாத் தோழர்களும் தங்கள் விண்ணப்பத்தை 6-1 50-க்குள் செயலாளர், முத்தியாலுப்பேட்டை திருவள்ளுவர் இளைஞர் கழகம், 94-95 புதுத் தெரு; மண்ணடி, சென்னை 1. என்ற முகவரிக்கு அனுப்பிவிட வேண்டும். எந்தப் போட்டிக்கும் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை, எனச் செயலாளர் அறிவிக்கிறார்.

கைத்தறி நெசவுத் துணிகள் ஏற்றுமதி!

கைத்தறி, விசைத்தறி நெசவு பருத்தி ஜவுளி திணுசுகளை தங்கு தடையின்றி ஏற்றுமதி செய்ய, இம்மாதக் கடைசியிலிருந்து அனுமதிக்கப் பெறுமென இந்திய சர்க்கார் முடிவுசெய்து அறிவித்துள்ளனர். முன்பு வெளிவந்த அறிக்கை யொன்றின் மூலம் 1949 டிசம்பர் வரையிலேயே மேற்படி அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

திருத்தம்

'மாலைமணி' சென்னை 12-12-49 வெளியூர் 13—12—49 இதழில் 3-வது பக்கம் இரண்டாவது பத்தியில் "தோழர் சம்பத்திராவிடமுன்னேற்றக் கழகம், ஆனால் அவர் தம்பி செல்வன் திராவிடர்கழகம்" என்பதற்கு அடுத்து "தோழர் பார்த்தசாரதி திராவிடர் கழகம்" அவருடைய மகன் திராவிட முன்னேற்றக் கழகம்" என திருத்திக் கொள்க. (ஆ-ர்)

சட்டசபையில் தூங்குவதும் சட்டைப் பையை நிரப்புவதுந்தான் ஜனநாயக வேலைத் திட்டமா?

மதுவிலக்குச் சட்டத்துக்குப் புதுவிலக்குச்சட்டம் கொணரும் 'பொதுநல விரும்பிகள்!'

கூடிப் பேசாதேயென்றால், குறையை எடுத்துக் கூற யாருளர்?

கோவையில் அன்பழகன் - ஆசைத்தம்பி- சீனிவாசன்

கோவை, டிச. 12—

11-12-49 ஞாயிறு மாலை 6-மணிக்கு தெப்பக்குளம் வீதி மைதானத்தில், நகர தி. மு. கழகத்தின் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். தோழர் வேலு அவர்கள் திராவிடப்பண் பாடியபின், தோழர் எம். ஏ. நடராசன் முன்மொழிந்து, தோழர் கே. சிவசாமி வழிமொழிய-கோவை மாவட்டக் குழு உறுப்பினர் தோழர் எம். பட்டிலிங்கம் அவர்கள் தலைமைவகித்தார்.

டி. கே. சீனிவாசன்

தலைவர் முன்னுரைக்குப் பின் பேசிய, தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், நாட்டிலே ஏற்பட்டுள்ள பல சிக்கல்களை, துயரங்களைத் தீர்க்க தி. மு. க. போன்ற நோக்கங் கொண்ட கழகங்கள் வளர வேண்டுமெனவும், அரசியலார் அடக்குமுறையையே நம்பியுள்ளது, ஆங்கிலேயர் ஆட்சியைத்தான் மக்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறதெனவும், இன்று கிடைத்துள்ள ஆட்சி, சுயராஜ்யம் என்றோ, இராமராஜ்யம் என்றோ கூறுவார்களானால், மக்கள் அதைக் கேலியாகவே கருதுவார்கள் என்றும் விரிவாகச் சொற்பொழிவாற்றினார்.

அடுத்துப் பேசிய தோழர் ஆசைத்தம்பி அவர்கள், இன்றைய ஆட்சியில் மக்கள் பேச்சுரிமை, எழுத்துரிமை கூட இல்லாமல் அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுவதையும், திராவிட முன்னேற்றக் கழகப் புத்தகங்களும், திராவிட இயக்கப் பத்திரிக்கைகளும், பறிமுதல் செய்யப்படுவதையும், ஜாமீன் கேட்கப்படுவதையும், நாடகங்கள் தடை செய்யப்படுவதையும் எடுத்துக்காட்டி, இத்தகைய போக்கு மாறினாலொழிய, உண்மையான ஜனநாயகத்துக்கிடமில்லையென்றும், தி. மு. கழகம் அத்தகைய ஜனநாயகம், அறிவுப் புரட்சியினாலேயே விளையும் என்பதைக் கருதியே பதவி வேட்டையில், சட்டசபைத் தேர்தலில் ஈடுபட விரும்பாமல், மக்களை அறிவும் ஆற்றலுங் கொண்டவர்களாகச் செய்ய பல முனைகளிலும் பாடுபடுகின்றதென்றும், சிறப்பாக-மக்களுடைய மூடநம்பிக்கைகளை முறியடித்து, பழமைப் பிடிப்பைப் போக்கி, பகுத்தறிவுப் பாதையில் நடக்கச் செய்கிறது என்றும், பலப் பல எடுத்துக்காட்டுகளுடன் பேசி முடித்தார்.

அன்பழகன்

இறுதியாகப் பேசிய தோழர் க. அன்பழகன் எம். ஏ, அவர்கள், சுமார் 1-மணி நேரம் இன்றைய நிலையை விளக்கிப் பேசினார்கள். தோழர் அன்பழகன் அவர்களின் சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—

"எனக்குமுன்பேசியதோழர்கள், இன்று நடைபெறும் ஆட்சி, ஒரு கட்சி ஆட்சியாக அதுவும் ஏகாதிபத்தியதன்மை கொண்ட ஆட்சியாக உள்ளதே யன்றி- நேர்மையுள்ள, மக்களிடம் பற்றுக்கொண்ட மக்களாட்சியாக இல்லை என்பதைக் காரணங்களுடன் எடுத்துக் காட்டினார்கள். இன்று நடைபெறுவது ஜனநாயக ஆட்சியானால் அவர்களுடைய ஆட்சியிலே கைக்கொள்ளும் நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவதைப் போலவே, அதில் உள்ள நன்மை தீமைகளும் அறிவிக்கப்பட்டாக வேண்டும். நம் நாட்டிலோ நூற்றுக்குப் பதினைந்து பேர்களே கையெழுத்துப் போடத் தெரிந்தவர்கள், மற்றவர்களோ தற்குறிகள். இந்தக் கையெழுத்துப்போடத் தெரிந்தவர்களிலும் பத்திலே ஒருவருக்குத்தான் பத்திரிக்கை படிக்க இயலும். பொது விவகாரங்களைத் தெரிந்துகொள்ள சிறிதாவது வாய்ப்புண்டு. இன்று வரவிருக்கின்ற வயது வந்தோர்க்கு வாக்குரிமை திட்டப்படி- 18-கோடி பேர் வாக்குரிமை பெறுகிறார்கள். அவர்களுக்குள்ளே 1½ கோடி பேருக்குத்தான் கையெழுத்துப் போடத் தெரியும் என்று அரசியலாரே தெரிவித்துள்ளனர். அவ்வாறானால், வாக்குரிமை பெற்றுள்ள மக்கள் எத்தகைய பொது அறிவோடு, தெளிவோடு வாக்களிக்கப்போகிறார்கள் என்று எண்ணிப்பாருங்கள், நமது தமிழ் நாட்டிலே உள்ள சுமார் 240 லட்சம் மக்களில் சுமார் 3 லட்சம் பேர்கள்தான் பத்திரிகை படிக்கக்கூடியவர்கள். இந்நிலையில் — வாக்கெடுப்பு—கேலிக்கூத்தாகாமல் உண்மையான ஜனநாயகத்தை எப்படி மலரச் செய்ய முடியும்?

இடர் நீக்க யாருளர்?

இந்த நிலையிலுள்ள மக்களிடையிலே — காங்கிரஸ் ஆட்சியிலே நடைபெறும் தவறுகளை, பயனற்ற திட்டங்களை யாராவது எடுத்துக் கூறிப் பொதுக்கூட்டங்களிலே விளக்கினாலொழிய எப்படித் தெரிந்துகொள்வார்கள்? காங்கிரஸ் மந்திரிகள் விளக்க முன்வருவார்களா? எப்படி முடியும்? தங்கள் தவறுகளைக் காங்கிரஸ்காரர்கள் தெரிந்துகொள்ளாமல் மறைக்கவே நேரம் போதவில்லை? வெளியிலே புறப்பட்டாலோ, எதிர்க்கட்சியினரைச் சாடவே நேரம் போய்விடுகிறது —மிச்சநேரமிருந்தால், சமர்த்திருக்க அதிபாடியாகவேண்டும்? இந்நிலையில் அமைச்சர்கள், மக்களை ஏமாற்றுவதைத்தான் தமது திறமையாகக் கொள்ளமுடியும்?

சட்டசபை உறுப்பினர்களோ—சட்டசபையில் தூங்கியது போக, வெளியிலே வந்தவுடன் சட்டைப்பையை நிரப்பிக்கொள்ளும் வழியைத் தேடுகிறார்களே, மக்கள் மன்றத்தைத் தேடுவது கிடையாது? வெளியிலே உள்ள காங்கிரஸ் தலைவர்களோ, எதிர்க்கட்சி தம் கண்களில் படாமல் இருக்க பாடுபடும் அளவு, தமது கட்சியின் கண்ணியத்தைக் காப்பாற்றும் முயற்சியிலே ஈடுபடுவதில்லை. நிலைமை இதுவானால் மக்களுக்கு உண்மைகளை விளக்கிக் கூறுவது யார?

இந்நிலையில் நிலைமையை விளக்க எங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? வேறு யார் இருக்கிறார்கள், மக்கள் நல்வாழ்வுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துக் கூற?

ஐந்தாண்டு விடட்டும் போதும்!

உண்மையிலேயே, தி மு. கழகம் நாட்டு மக்களுடைய நல்வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படும் இயக்கமாகும் அதைத் தோற்றுவித்தவர்கள், தன்னல நோக்கத்தோடோ,பதவிபெறும் ஆசையாலோ தோற்றுவிக்கவில்லை. இத்தகைய இயக்கம்-நாட்டிலே நல்லாட்சியை நிலவச் செய்ய மக்களால் வேண்டப்படுகின்ற காரணத்தாலேயே தோற்றுவித்துள்ளனர்.

காங்கிரஸ் தலைவர்களேகூட கூறுகின்றனர், ஒரு நல்ல எதிர்க்கட்சி தேவை என்று அப்பொழுதுதான் ஜனநாயகம் மலருமென்றும், எனவே, எதிர்க்கட்சியைத் தாம் வரவேற்பதாகவும். ஆனால் செயலோ-சொல்லுக்கு மாறுபடுகிறது. எதிர்க்கட்சியினராக உள்ள எங்களுடைய கருத்துக்களை நாட்டிலே பரவவிடாமல் தடைகள் விதித்தபடி. எதிர்க்கட்சி தேவை என்பதே, கதவை அடைத்துத் தாழ்ப்பாள் இட்டுவிட்டு விருந்தினரே வருக, வருக, என்று வாயிலில் எழுதிவைப்பதைப் போன்றதாகும் உண்மையில் காங்கிரசாருக்கு ஜனநாயகத்தில், மக்களாட்சியில் நம்பிக்கை இருந்தால், மக்களுடைய அடிப்படை உரிமைகளைத் தடை செய்யாமல், பேச்சுரிமையிலும் எழுத்துரிமையிலும் குறுக்கிடாமல் ஒரு ஐந்தாண்டுகள் விட்டுப் பார்க்கட்டும்! பின் நாடு இருக்கும் விதத்தைக் காணட்டும்.

மதுவிலக்கிற்கு ஒரு புது விலக்கு!

ஒன்று குறிப்பிடுகிறேன். ஒரு ஆட்சியில் திறமை உள்ளவர்கள் இருந்தால், தாங்களே கொண்டுவந்த ஒரு சீர்திருத்த சட்டத்தைத் தாங்களே, மறு பரிசீலனை செய்யவோ, திருத்தம் செய்யவோ மாட்டார்கள். ஆனால் நமது சர்க்கார்—தாங்கள் கொண்டுவந்த மதுவிலக்குச் சட்டத்திற்கு ஒரு புது விலக்குச் சட்டம் இப்பொழுது கொண்டுவருகிறார்கள். அவர்கள் கொண்டுவந்த மதுவிலக்குச் சட்டம் நிறைவேறித்தான் வந்துள்ளது என்று பேசிக்கொண்டே திருத்தம் கொண்டுவருகின்றனர். உண்மையில், தமது சட்டத்தை—நிறைவேறவிடாமல் — ஒரு எதிர்க்கட்சியார் செய்துவிட்ட காரணத்தால் மாற்றுகிறார்கள் என்றால் அர்த்தம் இருக்கும். மாறாக எதிர்க்கட்சியோ மதுவிலக்கை பூரணமாக ஆதரித்திருக்கிறது.

கடைகள்திறக்கப்படுகிறது!

எதிர்க்கட்சிகள் ஆதரவு தந்திருந்தும் சட்டம் தளர்கிறது என்றால், இது எதைக் காட்டுகிறது? ஆளவந்தார்களுக்கு ஒரு முறைச் செய்வதன் முன் சிந்திக்க ஆற்றலும் இல்லை, செய்ததை நிலைநாட்டத் திறமையும் இல்லை என்பதைத்தானே! புதிய திருத்தப்படி—முன்னர் தேவைப்பட்ட டாக்டர் சர்டிபிகேட் (உறுதிச்சான்) கூட இல்லாமல், ரூ 500 கட்டுபவர்கள் லைசென்ஸ் பெற்று—மாதம் 4—புட்டி மது பெற்றுக் கொள்ளலாமாம். இராணுவத்தில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு மது வருந்த தடையில்லையாம் நல்லவேலையாக—மதுவிலக்கு உத்தியோகஸ்தர்களையும (இப்பொழுது அடிக்கடி குடித்துவிட்டு அகப்பட்டுக்கொள்வதால்) இராணுவ உத்தியோகஸ்தர்களோடு சேர்க்காமல் விட்டுவிட்டார்கள்! இந்நிலையிலே மதுவிலக்கு பூரண வெற்றி தருமுன் மதிவிலக்கு — முழு வெற்றி பெற்றிருக்கிறது!

இப்படியேதான் ஜமீன்தார் ஒழிப்பு— என்ற பெயரால் ஜமீன்தார்களுக்கு ஏராளமான நஷ்டஈடு கொடுக்கத் திட்டமிடுகின்றனர். ஜமீந்தாரியை ஒழிக்க தயங்குகின்றனர், அதனால் பயனடைவோர் பெரிதும் பார்ப்பனர்களாகையால், வியாபார வரியோ முன்பைவிட இப்போது அதிகம். அதனால் 10-கோடி ரூபாய் அதிகமாகக் கிடைக்கிறது அரசாங்கத்திற்கு. புதிய திட்டங்களுக்கோ பணமில்லையென்கின்றனர். மத்திய அரசாங்கத்தைக் கேட்டாலோ அவர்கள் கைவிரிக்கின்றனர். இவர்களோ விவசாயிகளிடம் கடன்கேட்டு வாங்கத் திட்டம் போடுகின்றனர். அப்படிக் கடன் கிடைத்தால்தான்- விவசாய அபிவிருத்திக்கு வழியேற்படுமென்கிறார்கள் அமைச்சர்.

நல்லவை செய்யவே நாம் வந்துள்ளோம்!

பெருவாரியான வரியை மத்திய சர்க்கார் மாகாணத்திலிருந்து வசூலித்துக் கொள்கின்றனர நேரடியாக. அதில் பெரும் பகுதியை இராணுவத்திற்கும்- வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் செலவிட்டு, மேலும்வெளிநாடுகளிலே பல கோடி ரூபாய் கடன் வாங்கியுள்ள நிலையில்கூட, அபிவிருத்தி திட்டங்களை கைவிடுகின்றனர்.

ஏற்கனவே வெள்ளைக்காரன் வெளியேறியபோது-மாகாணத்திலும்- மத்திய சர்க்காரிலும் வைத்துப்போன சேமிப்பு நிதியும் பாதிக்கு மேல் கரைந்துபோயிருக்கிறது என்றால், இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? புதிய மைனர், ஆட்டத் தெரியாமல் கூடிய கடைசியில் சொத்துக்களை அடமானம் வைப்பதைப் போலத்தானே தோன்றுகிறது. இந்நிலை மாறத்தான்— தெளிவான பொருளாதாரத் திட்டம் தேவை, என்கிறோம் நாங்கள். வடநாடு நம்மைச் சுரண்டாமல், நமது உழைப்பு வீண்போகாமல், வெளி நாட்டிலே உருக்குலையும் நம் தோழர்களையும் நாம் திரும்ப அழைத்து வர முயற்சி செய்ய, நம் நாடு- திராவிட நாடு, ஒரு தனி நாடாக வேண்டும், முழு உரிமை பெறவேண்டும் என்பதற்காகவும், மக்களிடையே சமூக வாழ்விலும், பொருளாதார நிலையிலும், அரசியல் பொறுப்பிலும் சமத்துவம் நிலவ வேண்டும் என்பதற்காகவுமே திராவிட முன்னேற்றகழகம் பணிபுரிகின்றது. எனவே, இதில் சேர்ந்து பணிபுரிய வாலிபர்களும்,மாணவர்களும், தொழிலாளர்களும் முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

தோழர் அன்பழகன் அவர்களின்விரிவுரைக்குப்பின்-தலைவர் முடிவுரையுடனும், நன்றி கூறலுடனும் கூட்டம் இரவு 10-மணிக்கு முடிவுற்றது.

(வி-உ)

ஐ. நா.-இஸ்ரேல் போட்டாபோட்டி

ஜெருசலம் பற்றி கெடுபிடி

லண்டன், டிச. 15—

இஸ்ரேல் தன் [illegible] டிசம்பர் 26-க்குள் ஜெருசலத்திற்கு மாற்றி விடுவதாக அறிவித்திலிருந்து ஐ. நா. தர்ம கர்த்தா கவுன்சிலும் ஜெருசலத்தை சர்வ தேசக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை அவசர அடியாக கவனிக்கும் என்று தெரிகிறது.

ஜனவரி மாதமுடிவில் தான் இவ் விஷயமான போசனை சாதாரணமாக கவனித்துக்கொள்ளப்பட வேண்டும் அவசர நிலைமையை முன்னிட்டு இப்பொழுதே எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இஸ்ரேலும் ஜெருசலத்தில் தலைநகரை மாற்றிதான் அதிகாரத்தை ஸ்தாபித்துக்கொள்ளும் முயற்சியில் தீவிரமாக இறங்கிவிட்டதாகவும் யுத்தம் நின்றதிலிருந்து இதுவரை 6 மந்திரிகள் ஜெருசலத்தில் அலுவல்களை கவனிக்க ஏற்கனவே அனுப்பப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

மதிப்புரை

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

விலை அணா 3. கிடைக்குமிடம்: அழகிரிசாமி நூல் நிலையம் 82, காசுக் கடைத்தெரு, திருவாரூர்]

இதன் ஆசிரியர் திருவாரூர் வி. வி. வி. ஆம் அவர்கள் மறைந்த தளபதி கே. வி. அழகிரிசாமி அவர்களின் தன்னலம் கருதாத தொண்டையும், அவரது நெஞ்சு வல்லுகளையும் திராவிட மக்களுக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார். இந்நிலையில் அவரது சொந்த நினைவே அவரை ஆதரிக்கத் தவறிவிட்டதையும் இடித்துக் கூறிக் கண்டிக்கிறார். இந்நூல் ஒவ்வொரு திராவிடனும் படித்துப் பயன் பெறக் கூடியதாகும்.

* * *

கற்கண்டு—1
பொறுமை கடலினும் பெரிது—11

[ஆசிரியர்:—பாரதிதாசன்; கிடைக்குமிடம்: பாரதிதாசன் 95, பெருமாள் கோவில் தெரு, புதுச்சேரி விலை ரு 1.]

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கற்பனை உள்ளத்தினின்றும் பொங்கி எழுந்து வழிந்தோடும் இரு அருவிகள் இந்நூலின் கண் இணைக்கப்பட்டிருக்கின்றன. கற்கண்டு-1, பொறுமை கடலினும் பெரிது—11 என்னும் இரண்டு நகைச் சுவை நாடகங்களை உரை நடையில் காட்டினர்க்கு அறிமுகப்படுத்துகிறார் புரட்சிக்கவிஞர். நடையின் சிறிய அளவில், இனிமையும்—எளிமையும்—அழகும் கொண்டு துலங்கின்றன புரட்சிக் கவிஞரின் நூல் என்றால், அதனைப் பற்றி விரித்துரைப்பதவும் வேண்டுமோ?

* * *

'மும்மூர்த்திகள்' உண்மை தெரியுமா?

[ஆசிரியர்:—அண்ணா தங்கோ; கிடைக்குமிடம்: தமிழ் நிலையம், 20. சஞ்சீவி பிள்ளைத்தெரு, சேலம். விலை ரு 3—12—0]

இந்நூலில் ஒவ்வொரு தலைப்பிலும் இருந்து வரும் மூவரை எடுத்துக்கொண்டு அவர்களையெல்லாம் இனிய முறையில் அறிமுகப்படுத்தி, யார் நம் கடவுள் மும்மூர்த்தி என்ற கேட்டு அதற்கு விடை கூறச் செல்லும் முறையே நூலின் முழுப் பொருளாக இருந்து வருகிறது. இந்நூலின்கண் தமிழகத்திலுள்ள பலரும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளனர். ஆசிரியரின் தமிழ் நடை இனிய—சுவைதரும்—தனித் தமிழ் நடை என்பது இந்நூலினை கற்போர்க்கு இனிது விளங்கும். யார் மும்மூர்த்திகள்? அறிய விரும்புகிறீர்களா? நூலினைப் படித்துத், தெரிந்து, பயன் பெறுங்கள்.

* * *

அமரேசன்

[ஆசிரியர்:—சாமி டி. எஸ் வேலன். கிடைக்கும் இடம்:—'கவினம்' பதிப்பகம், வேப்பேரி, சென்னை 7, விலை ரு 1]

இது சரித்திரம் தழுவிய ஓர் அழகிய கற்பனை நாடகம். தமிழ் நாட்டு வேந்தர்களின் வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கிக்கொண்டு கற்பனை வடிவில் வளர்ந்து, அறிவும் உணர்ச்சியும் ஊட்டி நிற்கிறது இந்த நாடகம். இந்நாடகம் அரங்கேற்றப்படும் போதெல்லாம் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் என்பதில் ஐயமில்லை. காதலும், வீரமும் ஒன்றோடொன்று பிணைந்து, வீரமுடன் சென்று மிகைகுடன் இலங்குகின்றன இந்நாடகத்தில். இதன் ஆசிரியர் தோழர் வேலன் இனிய, எளிய தமிழால் சொல்லோவியம் தீட்டும் பண்புடையார் என்பதைத்தான் யாரும் அறிவரே! இந்நூல் படித்தும், நடித்தும் பயன்பெறத்தக்க வகையில் அருமையாக அமைந்திருக்கிறது. மக்கள் இதனால் பயன் பெறுவார்களாக.

இனி நடப்பவை

சென்னை—ஞானமன்ற மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் ஞானவாத்தியார் கந்தப்பிள்ளைத் தெரு கார்ப்பரேஷன் கழகப் பள்ளியில் 18—12—49 ஞாயிறு காலை 10 மணிக்கு வித்துவான் இரா. சங்கரன் அவர்கள் திருக்குறளில் "ஒப்புரவு அறிதல்" என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றுவார்கள்.

* * *

சென்னை-ஓட்டேரி தி. மு. கழகச் சார்பில் 18-12-49 ஞாயிறு காலை 10 மணிக்கு புலவர் வே. தஅர்ச்சனனூர் அவர்களால் திருக்குறள் வகுப்பு நடத்த பெறும். இடம்: எண் 21, பிரிக்லின் ரோடு ஓட்டேரி.

* * *

சென்னை-வியாசர்பாடி இளைஞர் மன்ற நூல் நிலையத்தின் சார்பில் வியாசர்பாடி டி. கி. எம் பாடசாலையில் "தாழ்த்தப்பட்டோரும், சேரிகளும்" என்ற தலைப்பில் பலர் பேசுவர்.

* * *

சின்னபுட்கிரி-இவ்வூர் திருவள்ளுவர் நறிலையத்தில் 18-12-49 மாலை தோழர் மு. குப்புசாமி அவர்கள் திருக்குறளில் "அறன் வலியுறுத்தல்" என்ற அதிகாரத்தை விளக்குவார். பின்பு தோழர் அ. அறிவுக்கரசி தலைமையில் தோழர் மு. குமாரசாமி "வள்ளுவர் வாய்மை" என்ற தலைப்பில் பேசுவார்.

* * *

சென்னை—சென்னை சேப்பாக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகக்கிளை யொன்று துவக்குதற்கு 18—12—49 ஞாயிறு காலை 10 மணிக்கு, சேப்பாக்கம் அருணாசல ஆச்சாரித் தெரு 13 எண்ணுள்ள இல்லத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். பன்மொழிப் புலவர், திருசா. அப்பாத்துரை எம். ஏ; எல். டி. அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்கள். இதுபோது இதுவரை உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளவர்களும், சேர விரும்புவர்களும் கூட்டத்திற்கு தவறாது வருமாறு தோழர்கள் கோ. சம்பந்தன், எஸ். எல் ராமு (அமைப்பாளர்கள்) வேண்டுகின்றனர்.

ஒத்திவைப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர்—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 18-12-49 நிகழவிருந்த பொதுக்கூட்டம் சில காரணங்களால் ஜனவரி முதல் வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சென்னையில் டெலிபோன்சார்ஜுகள்

1949 டிசம்பர் 16-ந்தேதி முதல் சென்னை மாவட்டத்தில் டெலிபோன் சார்ஜுகள் இந்தியாவின் இதர சில நகரங்களிலுள்ளதுபோல் குறைக்கப் பெறுமென பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகிறது.

தூத்துக்குடியில் நாடகங்கள்

திராவிட முன்னேற்றக் கழக நிதிக்காக

டிசம்பர் 24, 25 தேதிகளில்

நடிப்புப் புலவர் K. R. ராமசாமி அறிஞர் C. N. அண்ணாதுரை ஆகியோர் நடிக்கும்

'சந்திரமோகன்'
'நீதிதேவன் மயக்கம்'

நாடகங்கள் நடைபெறும்

நாடகக் குழுவினர்
தூத்துக்குடி

விவரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்:—
செயலாளர்,
திராவிட முன்னேற்றக் கழகம்
நகரக் கிளை, தூத்துக்குடி.

நாடக காரியமாக தோழர் K. V. K. சமி அவர்கள் கீழ்க்கண்ட இடங்களுக்கு நன்கொடை வசூலிக்கச் செல்கிறார்

19—12—49 திங்கள்
திராவிட முன்னேற்றக்கழகம்
கோவில்பட்டி.

20—12—49 செவ்வாய்
"காந்தி லாட்ஜ்"
திருநெல்வேலி ஜங்ஷன்

சுற்றுவட்டாரத்திலுள்ள தோழர்கள் மேற்கண்டவர்களுக்குச் சென்று நாடகங்கள் பற்றிய விவரங்கள், தெரிந்து நன்கொடை டிக்கட்டுகள் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
நாடகக் குழு.

இந்தியப் பகுத்தறிவாளர் மாநாடு

18-12-49 காலை 9-30 மணிக்கு
சென்னை மவுண்ரோடு ராஜாஜீ மண்டபத்தில்
தோழர் ஆர். பி. பராஞ்சிபே தலைமையில் நடைபெறும்
தோழர் சி. என் அண்ணாதுரை, முதலியோர் கலந்துகொள்வர்.

போகிற போக்கில்...!

"திருப்பதியில் பொருட்காட்சிசாலையொன்றைத் திறப்பதென திருமலை திருப்பதி தேவஸ்தான கமிட்டி முடிவு செய்துள்ளது"

—செய்தி

நானாவிதமான கலர் குங்குமங்கள, நாமக்கட்டிகள், துளசிச்செடிகள், துளசி மாலைகள், பெண்கள் தலையில் சூட்டிக் கொள்ளக்கூடிய இடிமயிர்கள், ஸ்ரீமத் வெங்கடேசப் பெருமானை பஜிப்பதற்கான பஜனைப் பாடல் புத்தகங்கள் இன்னபிற எண்ணிறந்த கண்கவர் காட்சிப் பொருள்கள் மேற்படி மியூசியத்தில் இடம் பெறலாமென நம்பகமான வட்டாரங்களினின்றும் செய்தி கிடைக்கிறது.

திருப்பதிக்கு மொட்டையடித்துக்கொள்ளவரும் பக்த கோடிகளின்—மொட்டையடிப்பதற்கு முந்தியும் பிந்தியுமான — திருவுருவங்களை படம் பிடித்து மாட்டவும் விசேஷ ஹால் ஒன்று ஒதுக்கப்படலாமென்றும் ஊர்ஜிதமாகாத செய்தியொன்று கூறுகிறது!

• • •

சென்னை வானொலி நிலையத்தில் மந்திரி மாதவமேனன் இந்தி கற்பதுபற்றி ஆங்கிலத்தில் பேசுவார்.'

—செய்தி

ஆங்கிலத்தில் பேசதா இந்தியிலா பேசிவிடப் போகிறார்!

கல்வி மந்திரியை இப்படிய கிண்டல் செய்வது! விடுங்கள் எப்படியோ பேசட்டும்! அவர் படித்தான் இந்தியில் பேசவாரேயாகில், நமக்கெல்லாம் புரியுமா என்ன அதனால் தான் தாராளமனதுடன் நம்மெல்லோருக்குமே புரியக் கூடிய ஆங்கிலத்தில் பேசுகிறார். என்று வைத்துக் கொள்ளுங்களேன்!

* * *

உலக சமாதானப் பிரியர் மாநாட்டில் நேரு பேசுவார்!

—செய்தி

அவசியம் பேசவேண்டும்! அமைதி சமாதானம் பெருக்கெடுத்தோட கணபதிலடங்கா நாணை (தேசிய டிக்ஷ்னரியில் இதற்கு அகிம்சைமுறை என்றும் ஒரு அர்த்தமுண்டு) சட்டங்களை பிறபித்து குழந்தைகள் பாலில்லாமல் அழுதுச்சப்தத்தைக்கூடப் பெருவாரியன வில் குறைத்துவிட்ட அருள் புரண்டோடும்) பொருளாதார நெருக்கடி காரணமாக கரைபோட முடியவில்லை!) சர்க்காரொன்றின் பிரதம மந்திரி சென்று பேசாமல், வேறு யார் அங்கு பேசுமது என்று உரத்தக் குரலில் உருட்டல் விழியோடு மிரட்டிக் கேட்கிறார், சமாதான பங்கத்தைக் கடுகளவும் சகிக்க முடியாத 'ட்ரேஸிங் பேப்பரைப் போன்ற நுண்ணிய மனதுடை நண்பரொருவர்,!

கோவை மாவட்ட தி. மு. க. செயற்குழு கூட்டம்

18-12-49 ஞாயிறு காலை 10-மணிக்கு சுக்குருவாரப் பேட்டை கழகக்கட்டிடத்தில் நடைபெறும். உறுப்பினர் அனைவரும் தவறாது வரவேண்டப்படுகிறது!

— செயலாளர்.

மின்சார ரயிலில் செல்வோர்க்கு!

சென்னை, டிச. 15—

பிரயாணிகள் மின்சார இரயில் வண்டிகள் எந்நேரத்தில் எந்த ஸ்டேஷனுக்கு வந்து புறப்படும் என்பதை இலகுவாய் அறிய வசதிக்கு, சென்னை கோடம்பாக்கம் இரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் ஜி. தங்கவேலு ஒரு புதிய 'டைம் டேபிளை' ஏற்படுத்தியிருக்கிறார்

இந்த டைம்டேபிளில் காலை 4-மணி முதல் இரவு 11 மணி வரை செல்லும் வண்டிகளின் நேரத்தை 4, 5, 6 என்று 23 வரை கேலண்டர் வெப்பு வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கம்பருக்கு அடியில் கறுப்பு மசியில் எந்நேரத்தில் எந்த ஸ்டேஷனுக்கு வண்டி வரும் என்பதை ஒவ்வொரு மணிக்கு நேரே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்த அட்டவனை மூலம், காலை 10-மணியிலிருந்து 11-மணி வரையில் வண்டிகள் அதிகமாய்ஓடுவதை அறியலாம். இந்த அட்டவனை சென்னைக்கு, தாம்பரத்திலிருந்து வரும் வண்டி கோடம்பாக்கத்திற்கு எந்நேரத்தில் வரும் என்பதைத் தான் குறிப்பிடுகிறது. இதனால் பிரயாணிகளுக்கு அனுகூலமிருப்பதாகத் தெரிந்தால் இதர ஸ்டேஷன்களிலும் இது ஏற்படுத்தப்படலாம்.

பொழுது போக்கு

தமிழ்—நாடகம்

ஒற்றைவாடை —இலட்சியம் தாம்

தமிழ்—சினிமா

பாரகன்	—வேதாள உலகம்
கிரௌன்	— இன்பவல்லி
கெயிட்டி	— ,,
பிராட்	— அபூர்வ சகோதரர்கள்
வெலிங்டன்	— ,,
சரஸ்வதி	— சக்ரதாரி
லட்சுமி	— போஜன்
மகாராணி	— கன்னியின் காதலி
சினிமாசென்ட்ரல்	—ரத்னாவின் காதல்

தெலுங்கு

சாணி	— லைலா—மஜ்னு
சன்	— ,,
கபாலி	— ரட்சரேகா

ஆங்கிலம்

Casino	— The Big Stea
New Globe	— Colorado Territory
New Elphinstone	— In old Chicago
Midland	— Little Women
Roxy	—The Lost Tribb
Minerva	— Adventures of Don Juan

ஹிந்தி

பிராட்வே	— மேலில் ஷேனும்
செலக்ட்	— லாட்லி
ஸ்டார்	— பெண்கள் பள்ளிக்கூடம்
சித்ரா	—
ஸ்டார்	— இளைஞர் திருவிழா மோகினி

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

18—12—49

சிவகங்கை:—	டி. கே. சீனிவாசன், சி.பி சிற்றரசு.
கோவை:—	என். வி. நடராசன், பி. பழனிச்சாமி.
குளத்தூர்:—	ஏ. சித்தையன், மு. கருணாநிதி.

19—12—49

மேட்டுப்பாளையம் (திருச்சி):—	என். வி. நடராசன்.
பட்டிவீரன்பட்டி:—	எஸ். அப்பாவு, எம். அய்யாசாமி எஸ். முத்து, கே. நடராசன்.

20—12—49

கூடலூர் (மதுரை):—	சி. பி. சிற்றரசு, வே. துரைராசு.

வடநாடு தொடர்பால்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புணர்வு இந்நாட்டவர்க்கு எத்துணையுமில்லாது போய் விட்டது 'துர்பாக்கிய' நிலைக்கு துயருறவேண்டிய தன்மையிலேயேயுள்ளோம். இடைகாலத்தில் இந்நாட்டவர் உளத்தை மறைத்த நச்சுத்திரையே இப்பொல்லாத நிலைவுக்குக் காரணமாயிருந்ததென்பதை வரலாறறிந்தோர் உணரலாகும்.

இந்த நிலையில்தான் இந்நாட்டு இளமாணவர்களிடையே வடநாட்டு இந்தி மொழி திணைத் துணையும் தொடர்பற்ற இந்தி மொழி- வலுக்கட்டாயமாக அதிகார பூர்வமாக, (சலுகைகள் பலவற்றோடு) புகுத்தப்பெற்று வருகிறது. ஆச்சாரியாரின் தெலுங்கு அறிவு பாழ்பட்டுப் போனதுபோல, இந்நாட்டு வருங்கால மக்களின் தாய்மொழியறிவு வரண்டு போவதற்கு இவ்விந்தி மொழி பெருத்த அளவில் துணை செய்ததனேதிருப்!, இதைத்தானே நாம் ஆரம்பகால முதலே எடுத்துக் கூறி எச்சரித்து வருகிறோம்! ஆச்சாரியார், தனது தெலுங்கு அறிவு சிதைந்ததற்கு வருந்துவதையொத்த ஒரு தன்மைபோலத்தானே இந்நாட்டு வருங்கால சமுதாயமும் வருந்தும் நிலையை எய்தும்? பொறுப்புள்ள ஆட்சியாளர் இதனை மனதிற் கொள்ள வேண்டாமா? ஆச்சாரியார் கருத்து வெளியிட்டுக்குப்பின்னுலாவது சர்க்காரின் மனந்திருந்தும் மார்க்கமேற்படுமா? அல்லது பல்வகை கலை நாகரிகப் பண்பாடுகள் கொண்ட உபகண்டமொன்றை ஒரு நாடு என்று சொல்லிக்கொண்டு அதற்கு ஒரே தேசிய மொழி தேவையென்று சர்வதிகார முறையில் சவடால் அடித்துக்கொண்டு பிற்போக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் பித்தலாட்ட சக்திகளுக்குப் பலியாகவேண்டியதுதானா இத்தென்னாட்டு இளைஞர் சமுதாயம்?

"பாஷாவாரி அடிப்படை மீது நாடு பிரிந்தால் பல சங்கடங்கள் தோன்றியே தீரும். பல ஆண்டுகளுக்கு முன் பிரசார வேலைக்காக இத்தேசத்தைப் பிரித்தோம் ஆனால் பிரசாரம் வேறு; நிர்வாகம் வேறு" என்பதாக அண்மையில் பூரி கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்ட அதே ஆச்சாரியார், இன்று ஆந்திர மாகாணப் பிரிவினையைப் பாராட்டியும் வாழ்த்தியும் வரவேற்றிருப்பது நமக்கு ஆச்சரியமூட்டவில்லையெனினும், ஆந்திர மாகாணப் பிரிவினைப் பத்திரத்தில் கையெழுத்திடும் பெரும் வாய்ப்பு தனக்குக் கிடைத்தால் 'மகிழ்ச்சிக் கடலில் ஆழ்வேன்' என்று கூறி, ஆந்திரமாகாணப் பிரிவினைக்கு மனப்பூர்வமான ஒப்புதலைத் தந்துவிட்ட ஆச்சாரியார், இதர மொழிவழி பிரிவினை கோரிக்கைகள் பற்றி யாதும் வாய் மடுக்காதிருப்பதேனோ என்று கேட்கிறோம்.

காங்கிரசின் அன்றைய வாக்குறுதிக் கேற்பவும், மொழிவழி பிரிவினை அவசியமென்று கருதியதற்கொப்பவும் இன்று ஆந்திர மாகாணப் பிரிவினைக்குக் கைச்சாத்திட்டுவிட்ட காங்கிரஸ் ஆட்சி கர்னாடக மாகாணம் போன்ற மொழிவழிப் பிரிவினைகளுக்கு இடமளிக்கத் தயங்குவது ஏனோ என்று கேட்கிறோம். தெலுங்குமொழி பேசுவோர்க்கு தனிமாகாணம் அளிக்கலாமென்று தோன்றும்போது, கன்னடம் போன்ற மொழிகளை பேசுவோர்க்கும் தனி மாகாணம் வகுத்துத் தருவதில் தாமதப்படுவது எந்த வகையில் நியாயமும் பொருத்தமுமாகுமென்றுதானே யாருக்கும் கேட்கத் தோன்றும்? சொல்லும் செயலும், அறிவும் நடப்பும் ஒத்துவருவதில்லை நம் தேசபக்தர்களுக்கு என்பதற்கு இதுவுமொரு சான்று என்பதைக் கூறிமுடித்துக்கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம்

❖

இதுவரையில் தழைத்துள்ள கிளைகள்

❖

360

❖

இந்தியத் தலைவருக்கு சொந்தக் கொடி

புதுடில்லி, டிச. 15—

இந்தியத் தலைவர் (ஜனாதிபதி) ஜனவரி 26-ம் தேதி பதவி ஏற்கும்போது பிரகடனம் முழங்கும். அதே சமயத்தில் அவருடைய சொந்தக் கொடி சர்க்கார் மாளிகை மீது ஏற்றப்படும்.

இக்கொடியில் 4 சதுரங்கள் இருக்கும். ஒன்றும் அதற்கு எதிருள்ளதும் நீல நிறமாகவும் மற்றொன்றும் அதற்கு எதிரிலுள்ளதும் சிவப்பாகவும் இருக்கும்.

இந்தியாவின் அரசாங்க சின்னமான மூன்று சிங்கங்கள், யானை, குதிரை, தாமரை இந்நான்கும் தங்கக் கலரில் சதுரத்திற்கு ஒன்றாக இடம் பெறும்.

மாகாண கவர்னர்களுக்கும், ராஜ பிரமுகர்களுக்கும் ஜனவரி 26-ம் தேதி முதல், சொந்த கொடி ஏற்படும். இவைகளுக்கு மத்தியில் இருப்பதுடன் ராஜாங்க சின்னமும், தேவநாகரிலிபியில் மாகாணம் பெயரும் எழுதப்பட்டிருக்கும்.

([illegible])

மத்திய தி. மு. கழக நிதிக்காக

விருதுநகர் சென்ட்ரல் தியேட்டரில்

"சந்திரமோகன்"

என்ற சரித்திர நாடகம்

26—12—49 திங்கட்கிழமை நடைபெறும்

தோழர்கள் சி. என். அண்ணாதுரை, கே. ஆர். இராமசாமி ஆகியோர் நடிப்பார்கள்

தோழர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனூர்

அவர்கள் தலைமைவகிப்பார்

தியேட்டரில் இடவசதி மிகவும் கொஞ்சமாக இருப்பதாலும், அளவுக்கு மேல் டிக்கட் கொடுக்க இயலாத நிலையில் இருப்பதாலும் வெளியூர் உள்ளூர் தோழர்கள் தங்களுக்குத் தேவையான டிக்கட்டுகளை

22—12—49-க்குள்

பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டியது

டிக்கட் விவரம் (வரியுள்பட).—ரூ. 5, ரூ. 3, ரூ. 2.

குறிப்பு:—முன் கூட்டியே பணம் அனுப்பி டிக்கட் பெறுவிட்டால் நாடகத்தன்று டிக்கட் கிடைப்பது கஷ்டம்.

பணம் அனுப்பும் முகவரி :—

கே. எஸ். எஸ். அய்யாசாமி,
பொருளாளர் தி. மு. கழகம்.
எவரெஸ்ட் சுருட்டு கம்பெனி, விருதுநகர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தார்,
விருதுநகர்.

ரயில்வே கால அட்டவணை

எழும்பூர்
(நவ. 10உம்தேதி முதல்)

புறப்படும் நேரம்

(மெயின் லைன்)

திருச்சி எக்ஸ்பிரஸ்	காலை	9-10
விழுப்புரம் பாசஞ்சர்	மாலை	3-45
செங்கோட்டை பா.	காலை	6-15
இண்டோசிலோன் எக்ஸ்.	இ.	8-10
திருவனந்தபுரம்பாஸ். பா.	,,	9-40
மதுரை பாசஞ்சர்	,,	10-40

(கார்டு லைன்)

தனுஷ்கோடி பாசஞ்சர்	கா.	10-40
திருவனந்தபுரம் எக்ஸ்.	இ.	7-40
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	,,	9-20

பீச்சிலிருந்து

காஞ்சிபுரம் பாஸ். பா.	மாலை	5-38
காஞ்சிபுரம் பாசஞ்சர்	மாலை	5-59

வரும் நேரம்

செங்கோட்டை பா.	இரவு	9-15
மதுரை பார்சல் பா.	காலை	5-5
இண்டோசிலோன் எக்ஸ்.	கா.	7-20
திருவனந்தபுரம் பாஸ்.	காலை	5-30
திருச்சி எக்ஸ்பிரஸ்	மாலை	7-15
விழுப்புரம் பாசஞ்சர்	மாலை	4-45

(கார்டு லைன்)

தூத்துக்குடி எக்ஸ்.	காலை	6-00
திருவனந்தபுரம்எக்ஸ்.	காலை	6-35
தனுஷ்கோடி பசஞ்சர்	கா.	11-25

(பீச்சிற்கு)

காஞ்சிபுரம் பாஸ். பா.	காலை	9-5
காஞ்சிபுரம் பாசஞ்சர்	காலை	9-17

சென்ட்ரல்

புறப்படும் நேரம்

கல்கத்தா மெயில்	இரவு	9-35
கிராண்ட்டிரங் எக்ஸ்.	கா.	10-50
விசாகை பாசஞ்சர்	காலை	8-0
விசாகை பாசஞ்சர்	இரவு	7-55
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை	7-10
பம்பாய் மெயில்	இரவு	8-50
மைசூர் பாசஞ்சர்	காலை	8-55
பெங்களூர் மெயில்	இரவு	9-15
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	மத	12-50
பெங்களூர் பாசஞ்சர்	காலை	6-40
பெங்களூர் பாசஞ்சர்	இரவு	9-20
ஜோலார் பேட்டை பாசஞ்சர்	காலை	11-30
அரக்கோணம் பாசஞ்சர்	மாலை	6-33
நீலகிரி எக்ஸ்பிரஸ்	இரவு	8-15
மலபார் எக்ஸ்பிரஸ்	காலை	9-5
கொச்சி எக்ஸ்பிரஸ்	மாலை	5-30
மங்களூர் எக்ஸ்பிரஸ்	இரவு	7-25

வரும் நேரம்

கல்கத்தா மெயில்	காலை	7-10
கிராண்ட்டிரங் எக்ஸ்.	மாலை	4-20
விசாகை பாசஞ்சர்	காலை	10-10
விசாகை பாசஞ்சர்	இரவு	8-35
பம்பாய் எக்ஸ்பிரஸ்	மாலை	7-10
பம்பாய் மெயில்	காலை	5-40
மைசூர் பாசஞ்சர்	மாலை	4-55
பெங்களூர் மெயில்	காலை	6-0
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	மாலை	3-40
பெங்களூர் பாசஞ்சர்	காலை	5-30
பெங்களூர் பாசஞ்சர்	இரவு	8-40
ஜோலார்பேட்டை பாஸ்.	மத	1-15
நீலகிரி எக்ஸ்பிரஸ்	காலை	7-5
மலபார் எக்ஸ்பிரஸ்	மாலை	5-20
கொச்சி எக்ஸ்பிரஸ்	காலை	9-0
மங்களூர் எக்ஸ்பிரஸ்	காலை	7-25

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்ட அழைப்பு

நாளது 25-12-49 ஞாயிறு காலை 10 மணிக்கு N. S. பங்களாவில், திருச்சிமாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும் அதுசமயம் நிர்வாக குழு தேர்தல் நடைபெறும். எனவே, ஒவ்வொரு கிளைக் கழகங்களிலிருந்து மாவட்ட கழகத்திற்கு இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்வதுடன், இதையே அழைப்பாகக் கருதி வரவேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் அன்பன்
G. பராங்குசம்
அமைப்பாளர் திருச்சி மாவட்டம்

திருத்தம்

சென்றைய மாலைமணி இதழில் "அறிவு சாட்குறிப்பு" விளம்பரத்தில் '2/12, பிராட்வே, சென்னை" என்றிருப்பதை '2/122 பிராட்வே' எனத் திருத்தி வாசிக்கவும்.

வானொலி

(18-12-49 ஞாயிற்றுக்கிழமை)

சென்னை
[211·3 மீட்டர்கள்]

காலை :

- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 சினிமாப் பாட்டுகள்
- 8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
- 8-30 பாப்பா மலர்
- 9-00 மதராஸ் எ. கண்ணன்—(மிருதங்கம்)

பிற்பகல் :

- 1-00 சி. பி. ராதா, ஆர். ஜயலக்ஷ்மி—நூலிசை
- 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
- 2-00 தமிழில் செய்திகள்
- 3-00 வரதராச ஐயங்கார்-பாட்டு

மாலை :

- 4-00 சதம்பம் (இசைத்தட்டு)
- 5-30 எச். ஆர். நாராயணன்—பாட்டு
- 6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 6-15 சரஸ்வதி பலராமன்-பாட்டு
- 6-45 எச். பத்மநாபன் — பாட்டு

இரவு :

- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 நூல்வகை - (இசைத்தட்டு)
- 8-00 ராஜலக்ஷ்மி ராமநாதன், ஜோசலதா ராமச்சந்திரன் பாட்டு
- 8-30 பி. சோமமூர்த்தி-வயலின்
- 9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 9-15 ஆர். குருமூர்த்தி—பாட்டு
- 10-30 முடிவு

திருச்சி
[395·8 மீட்டர்கள்]

காலை :

- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 டி. வி. கிருஷ்ணமூர்த்தி—பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 8-15 டி. சௌடையா வயலின் (இசைத்தட்டு)
- 8-30 டி. என். கஸ்தூரி-பாட்டு

பிற்பகல் :

- 12-00 சதம்பம் (இசைத்தட்டு)
- 12-30 பேரியாளைகவனத்காட்சி
- 12-35 காப்பி அரங்கம் தொடர்ச்சித்திரம்
- 12-45 கலைஞர் வெற்றி நாடகம்
- 1-00 மணி மலர்
- 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 1-40 மணி ஐயர் — ஒலிப்பதிவு
- 2-00 தமிழில் செய்திகள்
- 2-10 பெண்ணுலகம்
- 2-30 நீங்கள் கேட்டவை

மாலை :

- 5-00 ஆர். வெங்கடேஸ்வர ஐயர்—வீணை
- 5-40 அ. இ. ரே. வித்வான்
- 6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 6-15 டி. என். கஸ்தூரி-பாட்டு
- 6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு :

- [illegible] தமிழில் செய்திகள்
- 7-30 சித்ரகானம் (இசைத்தட்டு)
- 7-45 எஸ். பிச்சையா—பேச்சு
- 8.00 ஏ. டி. சுந்தரன்—பாட்டு
- 9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 9.15 ஆர். வெங்கடேஸ்வர ஐயர் வீணை
- 9-35 இசைவேளை (இசைத்தட்டு)
- 9-55 முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45, Muthumari Chetty Street, Madras-1.